THIRU R. UMANATH: Mr. Speaker Sir, the Hon. Chief Minister could have advised the Governor. The Governor acts only on the advice of the Hon. Chief Minister. ஆகவே, அந்த இலாகா மாற்றம் குறித்த ஸ்டேட்மெண்ட்டை அவை தற்போது நடப்பதாலே, அவைக்கு முதலில் அறிவிப்பு செய்துவிட்டு, பின்னர் வெளியே அறிக்கை விடலாம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கவர்னருக்கு அட்வைஸ் கொடுத்து இருக்கலாமே?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அறிவிப்பைக் கொடுக்க முதல் வாய்ப்பு பேரவைத் தலைவருக்கு எப்போது ஏற்படுகிறதோ அப்போது அதை அவைக்கு அறிவிக்கிறார். அவை நடந்து கொண்டு இருப்பதால், அவைக்கு அறிவித்து விட்டுதான் வெளியே அறிவிக்கவேண்டும் என்ற நிலைமை கவர்னருக்கு இல்லை. வெளியிடப்படுகிற ஆணைகள்-பை ஆர்டர் ஆப் கவர்னர்-என்றுதான் வருகிறது. ஆகவே நேற்றைக்கே செய்திகள் வெளியே வந்து விட்டது. முதல் வாய்ப்பு தற்போதுதான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு கிடைத்து இருப்பதால், கேள்வி நேரம் முடிந்த பின் அறிவிப்பதாக இருந்தார்கள், அப்படி அறிவிக்கும் முன்பே அந்தப் பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிவிட்டார்கள். ஆகவே, இதிலே ஒன்றும் பிரச்னையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகளை ஒத்திவைக்கின்ற நேரத்திலேயே மாண்புமிகு அமைச்சர்களின் இலாகா மாற்றப்பட்டு இருப்பதால் அது பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்து இருக்கிறேன். மேலும் இது கொள்கைப் பிரச்சினை அல்ல. மாண்புமிகு முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல கவர்னர் ஆணைபிறப்பித்தவுடனே அது அறிவிப்பாக வெளிவந்து விடுகிறது. இந்த அவையில் அறிவிப்பு செய்யவேண்டும் என்கிற நிலைமைகள் வரவில்லை.

3. தகவல் கோரல்.

எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பெற்றது.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதி அகில இந்திய அளவில் கோரிக்கை தினம் அனுஷ்டிக்க வேண்டும் என்ற முறையில் எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்த நேரத்தில், செங்கற்பட்டு மாவட்டம் புழல் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம், மாதவரம் ஒன்றியம் ஆகிய இடங்களில் அந்தக் கோரிக்கை தினத்திற்காக தங்களைத் தயார்ப்படுத்திக்கொண்டு இருந்த நேரத்தில், எதிர்க்கட்சிகளில் குறிப்பாக எங்களுடைய ஜனதா கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் திரு. கதிர்வேலு உட்பட, திராவிட முன்னேற்றக்கழகம், சி.பி.ஐ. போன்ற கட்சிகளின் தோழர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்னைகளை எல்லாம் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் குறிப்பிடலாம். ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்த பிறகு ஒத்திவைப்புத்